முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 93/2021

தேதி : 19-06-2025

(பி.வா.சா.1) – திரு.இளங்கோவன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. ராமசாமி பிள்ளை, வேணுகோபால் பிள்ளை உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். வேணுகோபால் பிள்ளை என் தந்தை என்றால் சரிதான். இரண்டு பேரும் சகோதரிகளை திருமணம் செய்து கொண்டனர் என்றால் சரிதான். ராமசாமி பிள்ளை என்பவர் ஜானகிஅம்மாள் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான் . என் தாயார் பெயர் பார்வதி என்றால் சரிதான். என் தாயருக்கு மூத்த சகோதரி உன்னாமலை என்பவர் உள்ளார் என்றால் சரிதான். ராமசாமிபிள்ளைக்கு வெகுநாளாக குழந்தை இல்லை என்றால் சரிதான். அதேபோல் வெகுநாட்களுக்கு பின்னர்தான் என் தந்தைக்கு நான் பிறந்தேன் என்றால் சரிதான். ராமசாமிபிள்ளைக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் உன்னாமலையின் மகனை ஒரு மாத குழந்தையாக இருக்கும்போது தத்தெடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் பிறப்பதற்கு 10 ஆண்டுக்கு முன்பாக தத்தெடுத்தார்கள் என்றால் சரியல்ல, தத்தெடுக்கவில்லை என்று என் பெற்றோர்கள் என்னிடம் சொன்னார்கள். தாவா சொத்தில் 2 ஓட்டுவீடுகள் உள்ளது என்றால் சரியல்ல, ஒரு லாகட கட்டிடம், ஒரு ஓட்டு வீடும் தான் இருந்தது. அந்த ஓட்டு வீட்டை என் தகப்பனார் காலத்திலேயே லாகட கட்டிடமாக மாற்றினார்.

2. ஏற்கனவே இருந்த லாகட வீட்டை 2ம் பிரதிவாதி இடித்து தற்போது கட்டியுள்ளார், நான் அதற்கு ஆட்சேபித்தேன். என் தகப்பனார் கட்டிய வீட்டில் நான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான், ஆனால் மாடிக்கு செல்வதற்கு வழியில்லை. 2ம் பிரதிவாதி இடித்து கட்டிய வீடு ராமசாமிக்கு சேரவேண்டிய பங்கு என்றால் இல்லை, பாகம் பிரிக்கவில்லை. வழக்கு சொத்தில் எனக்கு மட்டும்தான் பாத்தியம் என்றும், அதில் வாதிக்கோ, 2ம் பிரதிவாதிக்கு பங்கில்லை என்று கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ராமசாமியின் தத்து பிள்ளை என்ற நிலையில்

சொத்தை அனுபவித்து வருகிறார் என்றும், அதை நானும், என் சகோதரி ஆ ட்சேபித்து வருகிறோம் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ராமசாமி பிள்ளையின் வாரிசு என்று அரசு சான்று வழங்கியுள்ளது என்றால் சரியல்ல, அப்படி சான்று வழங்கவில்லை. சாட்சியிடம் வாரிசு சான்றின் நகலை காண்பித்து அதில் 2ம் பிரதிவாதி ராமசாமிபிள்ளையின் தத்து பிள்ளை என்று சான்று வழங்கப்பட்டுள்ளது என்று அதை பற்றி கேட்டபோது அதுபற்றி தனக்கு தெரியாது என்று கூறினார்.

3. வழக்கு சொத்தில் 2ம் பிரதிவாதிக்கு ராமசாமிபிள்ளையின் தத்து பிள்ளை என்று அந்தஸ்த்தில் பாகம் உள்ளது என்றும், ஆனால் நான் உண்மைக்கு மாறாக கட்சி செய்து வருகிறேன் என்றும், வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வீடு கட்டும்போது நான் அதை தடுத்தேன் என்றும், அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். போலிஸ் விசாரணையில் நான் சமாதானமாக போகிறேன் என்றும், 2ம் பிரதிவாதி ராமசாமிபிள்ளையின் தத்து பிள்ளை என்று ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் நான் அப்படி எழுதிக்கொடுக்கவில்லை, பொன்னுச்சாமி மகன் பிரேம்குமார் என்று தான் எழுதிக்கொடுத்தேன், மேலும் காவல்நிலையத்தில் என்னை அச்சுறுத்தியதால் எழுதிக்கொடுத்தேன். நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், காவல்நிலையத்தில் 2ம் பிரதிவாதி ராமசாமிபிள்ளையின் தத்து பிள்ளை என்றுதான் ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல.

ஒம். K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.